# சீறத்துன்னபி ﷺ

## நாள் 2



# இன்றைய தலைப்புகள்:

- பகுதி 1: நபி (ஸல்) அவர்களின் வெளிப்புற தோற்றம்
- பகுதி 2: நபி (ஸல்) அவர்களின் எளிமை, மனிதாபிமானம், கண்ணியம், நகைச்சுவை பண்புகள்
- பகுதி 3: நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்தை நேசித்த விதம்

## பகுதி 1: நபி (ஸல்) அவர்களின் வெளிப்புற தோற்றம்:

- அல்ருபை பின்த் முஅவ்வித் (ரலி) என்ற ஸஹாபிய பெண்மணியின் மகன், நபி (ஸல்) அவர்களின் தோற்றத்தைப் பற்றிக் கூறுமாறு தன் தாயிடம் கேட்டபொழுது அந்தத் தாய், ‘‘நீ அவர்களைப் பார்த்தால், சூரியன் உதித்ததுபோல் உணருவாய்’’ என கூறினார்கள்.

- கஅப் இப்னு மாலிக் (ரலி) என்ற ஸஹாபி கூறினார்கள்: ‘‘நபி (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கும் தருணத்தில் அவர்களது முகம் பௌர்ணமி நிலவு போல் பிரகாசமாக இருக்கும்’’.



- அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) கூறினார்கள்: ‘‘முஹம்மது நபி (ஸல்) அவர்களின் முகத்தை உற்றுப் பார்ப்பதை விட எனக்குப் பிரியமானது வேறெதுவும் இல்லை. இன்னும் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று நீங்கள் என்னிடம் கேட்டால், என்னால் அவர்களை விவரிக்க முடியவில்லை. ஏனென்றால், அவர்களின் முகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்த நான், எனக்கு இருந்த பிரமிப்பும், மரியாதையும் அவர்கள் முகத்தை பார்க்க முடியாமல், நான் என் முகத்தைத் தாழ்த்த வேண்டியதிருந்தது என்பதால், என்னால் அவர்களை விவரிக்க முடியவில்லை’’.

- அனஸ் இப்னு மாலிக் (ரலி) தனது ஏழு வயதிலிருந்து நபி (ஸல்) அவர்களுக்கு சேவகம் செய்து வந்தார்கள். அவர்கள் கண்மணி நாயகம் (ஸல்) தோற்றம் பற்றி இவ்வாறாக கூறுகிறார்கள்: ‘‘நபி (ஸல்) அவர்கள் மக்களில் நடுத்தர உயரமுடையவர்களாக இருந்தார்கள்; நெட்டையானவர்களாகவும் இல்லை; குட்டையானவர்களாகவும் இல்லை. அவர்கள் பொன்னிறமுடையவர்களாக இருந்தார்கள்; அவர்கள் சுத்த வெள்ளை நிறமுடையவர்களாகவும் இல்லை. கடும் சுருள் முடியுடையவர்களாகவும் இல்லை; முழுக்க படிந்த முடியுடையவர்களாகவும் இல்லை; இரண்டுக்கும் இடைப்பட்ட வகை

முடியை உடையவர்களாக இருந்தார்கள். அவர்களது முடி பட்டு, வெல்வெட் துணிகளைவிட மென்மையானதாக இருந்தது. எந்த நறுமணமும் அவர்களது வியர்வை வாசனைக்கு மிஞ்சியதில்லை''.

- நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்கள் நபி (ஸல்) அவர்களின் வியர்வையை ஒரு பாத்திரத்தில் சேகரித்து அதை வாசனை திரவியமாகவும், நோய்க்கு மருந்தாகவும் பயன்படுத்தி வந்தார்கள்.

- அலி இப்னு அபுதாலிப் (ரலி) அவர்கள் கண்மணி நாயகம் (ஸல்) தோற்றம் பற்றி இவ்வாறாக கூறுகிறார்கள்: ''அவர்களது முகம் சதைப்பிடிப்புடனோ அல்லது வட்டமாகவோ இல்லை; (அது முட்டை வடிவமாக இருந்தது); அவர்களது கண்கள் பெரிதாகவும், கருப்பு நிறத்துடனும், இமைகள் நீளமாக இருந்தன. அவர்களது மூட்டுகள் அவர்களது மேல் முதுகு போல் பெரியதாக இருந்தன. அவர்கள் பரந்த தோள்பட்டையுடன் இருந்தார்கள்''.

- அவர்கள் உடலில் முடி எதுவும் இல்லை. ஆனால் அவர்கள் மார்பில் இருந்து தொப்புள் வரை நீண்ட ஒரு மெல்லிய முடி இருந்தது.

- அவர்கள் நடக்கும்போது, சரிவில் நடப்பது போல் விறுவிறுப்பாக நடப்பார்கள். அவர்கள் திரும்பினால், அவர்களது முழு உடலுடன் திரும்பி உங்கள் முகத்தைப் பார்ப்பார்கள்.

- அவர்களுடைய இரு தோள்களுக்கும் நடுவே நபித்துவ முத்திரை இருந்தது; அது வேறு நிறத்தில் முடி வளர்ந்தது போல் இருந்தது.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எதிர்பாராமல் முதன்முறை பார்த்தவர்கள், அவர்களைப் பார்த்துப் பிரமித்து நிற்பார்கள். அவர்களுடன் சென்று வருபவர்கள், அவர்களைப் பற்றி அறிந்தவர்கள், அவரை நேசிப்பார்கள். அவர்களைப் பற்றி கூறும்போது, ''நபி (ஸல்) அவர்களைப்போல் நாங்கள் யாரையும் பார்த்ததுமில்லை; இனிமேலும் பார்க்கப்போவதுமில்லை'' என கூறுவார்கள்.

## பகுதி 2: நபி (ஸல்) அவர்களின் எளிமை, மனிதாபிமானம், கண்ணியம், நகைச்சுவை பண்புகள்:

- ஒரு முறை அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் படுக்கையை சுகமாக இருக்கவேண்டும் என்பதற்காக சில கூடுதல்

விரிப்புகளால் மென்மையாக்கினார்கள். இதன் விளைவாக, நபி (ஸல்) அவர்கள் வழக்கத்தை விட அதிக நேரம் தூங்கிவிட்டு தஹஜ்ஜுத் (இரவுத்) தொழுகையை தவறவிட்டு விட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் தூக்கத்திலிருந்து எழுந்ததும், என்ன நடந்தது என்று கேட்டு தெரிந்துகொண்டபின், தனது படுக்கையை முன்பு இருந்ததைப் போலவே மாற்றும்படி கேட்டுக் கொண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்களுக்கு நெருக்கமானவர்கள் அவர்களது நற்குணங்களைப் பற்றி பலமுறை கூறியுள்ளார்கள். அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் கூறியது, ''நான் நபி (ஸல்) அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் சேவை செய்துள்ளேன். அவர்கள் ஒரு முறை கூட என்னிடம் 'சீ' (தனது மனக்குறையை வெளிப்படுத்துவது) போன்ற வார்த்தைகளைக் கூறவில்லை'' என்று தெரிவித்துள்ளார்கள்.

- ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனஸ் (ரலி) அவர்களை ஒரு பணிக்காக அனுப்பி இருந்தார்கள். சிறுவனாக இருந்த அனஸ் (ரலி), வழியில் கவனம் சிதறி தெருவில் குழந்தைகளுடன் விளையாட ஆரம்பித்துவிட்டார்கள். சிறிது நேரம் கழித்து, நபியவர்கள் தாமதமாவதைக் கவனித்து, அனஸ் (ரலி) அவர்களை தேடி வந்தபோது அவர் விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

- அனஸ் (ரலி) நினைவு கூர்ந்து கூறியது, ''எனக்கு பின்னால் யாரோ என் காதுகளை இழுப்பதை உணர்ந்தேன். நான் திரும்பிப் பார்த்தேன்; நபி (ஸல்) அவர்கள் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

- நபி (ஸல்) அவர்கள் தனது பணிவையும், கண்ணியத்தையும் தனது எதிரிகளுக்கும் காட்டினார்கள். ஒருமுறை யூதத் தலைவர் ஒருவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்ற வழக்கமான இஸ்லாமிய வாழ்த்துக்குப் பதிலாக 'அஸ்ஸாம்மு அலைக்கும்' என்று கூறினார்.

- ''உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும்'' என்பதற்கு மாறாக ''உங்கள் மீது மரணம் உண்டாகட்டும்'' என்று கூறியிருக்கிறார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அமைதி காத்துக்கொண்டு, ''வ-அலைக்கும்'' (உங்களுக்கும் கூட) என்று பதில் கூறினார்கள்.

- இதைக்கேட்ட ஆயிஷா (ரலி) அவர்கள் மிகவும் கோபமடைந்து, ''அல்லாஹ் உன்னைச் சபிப்பானாக! உன்னை அழியச் செய்வானாக! நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அதைச் சொல்ல உனக்கு எவ்வளவு தைரியம்?'' என உரத்த குரலில் கூறினார்கள்.

- அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், 'ஆயிஷாவே! நிதானம் தேவை! அனைத்துச் செயல்களிலும் நளினத்தைக் கையாள்வதையே அல்லாஹ் விரும்புகிறான்' என்றார்கள். 'எப்பொழுதும் மென்மைதான் ஒன்றை அழகாக்கும் என்று உனக்குத் தெரியாதா? அதேபோல், எப்பொழுதும் ஒன்றில் கடுமை இருந்தால், அந்தக் கடுமை அதை அசிங்கப்படுத்திவிடும்'. (ஸஹீஹ் புகாரீ

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் சஹாபாக்களிடம் நகைச்சுவையாக பேசும் பழக்கம் உடையவர்களாகவும் இருந்தார்கள். ஆனால் அந்த நகைச்சுவைகள் தீங்கு மற்றும் பொய்கள் இல்லாததாக இருந்தது.

- ஒருமுறை ஒரு வயதான பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் சொர்க்கத்தைப் பற்றிக் கேட்டதற்கு, ''முதியவர்கள் சொர்க்கத்தில் நுழைய முடியாது என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்று பதிலளித்தார்கள்.



- அல்லாஹ்வின் மீது ஆணையாக, வயதான பெண்மணிகள் சொர்க்கத்தில் நுழைய முடியாது; ஏனென்றால் அல்லாஹ் முதலில் அவர்களை இளம் கன்னிப்பெண்களாக ஆக்கி, பின்னர் அவர்களை சொர்க்கத்தில் நுழையச் செய்வான்'' என கூறினார்கள். (திர்மிதீ ஹதீஸ்)

## பகுதி 3: நபி (ஸல்) அவர்கள் தனது உம்மத்தை நேசித்த விதம்:

🌲 அல்லாஹ் குர்ஆனில் நமது நபி (ஸல்) அவர்களை 'ரஃஉபுர் ரஹீம்' என்று வர்ணிக்கிறான். அதன் பொருள் 'முஃமின்கள் மீது மிக்க கருணையும், கிருபையும் உடையவர்'. (அல்குர்ஆன் அத்தவ்பா 9:128)

🌲 ஒரு தடவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையில் அழுது கொண்டிருந்தார்கள். அப்போது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபியவர்களிடம் வந்து ''ஏன் அழுகிறீர்கள்'' என்று கேட்டார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் தம் உம்மத்தை நினைத்து அழுவதாக கூறினார்கள். – (ஸஹீஹ் முஸ்லிம்)

🌲 அல்லாஹ் ஜிப்ரயீல் (அலை) மூலமாக நபி (ஸல்) அவர்களுக்கு கூறச்சொன்னது: ''அல்லாஹ் உங்கள் சமுதாயத்தைப் பற்றி உங்களை மகிழ்ச்சியடையச் செய்யப் போகிறான்; அதிருப்தி அடையச் செய்யப் போவதில்லை'' என்று சொல்லச் சொல்கிறான். இதன்மூலம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருப்திக்காக அல்லாஹ் அவர்களது உம்மத்திற்கு அருள்புரிவான் என்று விளங்குகிறது.

🌲 ஒவ்வோர் இறைத்தூதருக்கும் அவர் (தம் சமுதாயத்தாருக்காகப்) பிரார்த்தித்துக் கொள்ள அங்கீகரிக்கப்பட்ட பிரார்த்தனை ஒன்று (வழங்கப்பட்டு) உள்ளது. சில இறைத்தூதர்களும் அதை இந்த உலகத்தில் தான்வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திக்கொண்டார்கள். – ஸஹீஹ் புகாரீ

🌲 நூஹ் (அலை) அவர்கள் தான் வாழ்ந்த காலத்தில் இருந்த எல்லா அநியாயக்காரர்களையும் அழிக்க அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். அல்லாஹ் வெள்ளத்தை அனுப்பி, நூஹ் (அலை) அவர்களையும், ஈமான் கொண்டவர்களையும் தவிர மற்ற அனைவரையும் அழித்தான்.



🌲 இப்ராஹிம் (அலை) தனது சந்ததியினரிடமிருந்து ஒரு ரசூலை அனுப்புமாறு அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். அந்த துஆவின் பலன்தான் நமது

அன்புக்குரிய நபி (ஸல்) அவர்கள்.

- மூஸா (அலை) ஃபிர்அவ்னுக்கு எதிராக அல்லாஹ்விடம் துஆ செய்தார்கள். அல்லாஹ் ஃபிர்அவ்னை கடல்நீரில் மூழ்கடித்து அழித்தான். அவனுக்கு ஒருபோதும் நல்வழி காட்டப்படவில்லை.

- தனக்கு முன் எவருக்கும் வழங்காத ஆட்சிக்காக அல்லாஹ்விடம் சுலைமான் (அலை) துஆ செய்தார்கள். அல்லாஹ் அவர்களுக்கு காற்று, ஜின்கள், பறவைகள் மற்றும் விலங்குகளை கட்டுப்பட வைத்தான்.

- இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''ஒவ்வோர் இறைத்தூதருக்கும் அவர் (தம் சமுதாயத்தாருக்காகப்) பிரார்த்தித்துக் கொள்ள அங்கீகரிக்கப்பட்ட பிரார்த்தனை ஒன்று (வழங்கப்பட்டு) உள்ளது. எல்லா இறைத்தூதர்களும் அதை இந்த உலகத்தில் பயன்படுத்திக்கொண்டார்கள். நான் என்னுடைய பிரார்த்தனையை, மறுமையில் என் சமுதாயத்தாருக்குப் பரிந்துரை செய்வதற்காகப் பத்திரப்படுத்தவே விரும்புகிறேன். – ஸஹீஹ் புகாரீ

- அந்த பிரார்த்தனை (துஆ), அவர்களது முழு உம்மத்தையும் மன்னிக்கும் வகையில் கேட்கப்படும் துஆ, அந்த துஆவின் மூலம் ஒவ்வொரு முஸ்லிமும் சுவர்க்கம் செல்வார்.

- அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் புகாரீயில் வந்துள்ளது: நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, ''நியாயத்தீர்ப்பு நாள் எப்போது வரும்'' என்று கேட்டார்.

- நபி (ஸல்) அவர்கள், ''அது வரும்போது அதற்கு நீங்கள் என்ன தயார் செய்து வைத்துள்ளீர்கள்?'' என்று கேட்டார்கள். அந்த மனிதர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.

- பின்பு அந்த மனிதர் கூறினார், ''உண்மையில் என்னிடம் போதுமான தொழுகை, நோன்பு, தர்மங்கள் இல்லை. ஆனால், அல்லாஹ்வின் மீதும், அவனது தூதர் மீதும் எனக்கு உண்மையான அன்பு உள்ளது'' என்றார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''மனிதன் யாரை நேசிக்கிறானோ அவர்களுடன் இருப்பான்'' என உரைத்தார்கள்.

- இச்சம்பவத்தை விவரிக்கும் அனஸ் (ரலி) அவர்கள் இதைக்கேட்ட நேரத்தில் ஸஹாபாக்களின் உணர்ச்சிகளை விவரிக்கிறார்கள். ''நிச்சயமாக, நாங்கள் இதற்கு முன் இல்லாத அளவில் மிக மகிழ்ச்சியாக உணர்ந்தோம். ஏனெனில், நாங்கள் எங்கள் நபி (ஸல்) அவர்களை அளவுகடந்து நேசிக்கிறோம். மற்றும், நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் நிலைகள் மிகவும் வித்தியாசமாக இருப்பதால், எங்கே நபி (ஸல்) அவர்களை (மறுமை வாழ்க்கையில்) பார்க்க முடியாதோ என இதற்கு முன்பு எண்ணியிருந்தோம்'' என கூறினார்கள்.